# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வரு ஐப்பசி மீ கஉ உ செவ்வாய்க்கிழமை (28 Octo. 1952) [இல - ருச]


### இலங்கை இந்தியர் பிரசாவுரிமை

இலங்கை இந்தியர் பிரசா உரிமை வழக்கொன்றில் பிரித்தானிய மந்திரசபைச் சட்டக் குழுவினர் கொடுத்த தீர்ப்பின் விளைவை நீக்குதற்குத் தகுந்த திருத்தம் இலங்கை இந்தியர் பிரசா உரிமைச் சட்டத்திற் செய்ய அரசாங்கம் ஆலோசிப்பதாய் அறியவருகின்றது.

### சங்கரா மற்றோர் சரணிலேன்

திருச்சிற்றம்பலம்.

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லே னெம்பிரா னிழித்திட் டேனே.

திருச்சிற்றம்பலம்.

## கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

### சுக்கிர வார உற்சவமும் சைவ ஆகமப் பிரசங்கமும்

சென்ற வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர்ச் சைவமகாசபைத் தலைவர் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகர் ஷெடி பிரசங்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தேவாலயங்கள் யாவும் சைவாகம விதிப்படி நடைபெறவேண்டும் என்றும், சைவ அன்பர்கள் அதன் பிரகாரம் ஒழுக வேண்டுமென்றும் கூறினார். பிரமஸ்ரீ முத்துச்சாமிக் குருக்கள் அவர்கள் "ஆலயமும் அன்பர்களும்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு பேசும் பொழுது இறைவன் சக்தி சமேதராகவே எழுந்தருளியிருக்கின்றார். சக்தியினால் அகில அண்டங்களும் தோன்றிநின்று சங்கரிக்கப்படுகின்றன. மூர்த்தி பேதங்களும் வேதாதி கலைகளும் தோற்றமடைகின்றன. ஆன்மாக்கள் வேதாகமவழி ஒழுகித்தான் ஈடேறமுடியும். இல்லையேற் பிறப்பாதிய துன்பம் விட்டுப்போவதில்லையென்றும், பலபிரமாணங்களின் மூலமாக எடுத்துரைத்தார்.

வேதாகமங்களின்படி சிறுவப்பட்டதே ஆலயம். அதனைக் கூத்துக் கொட்டகை முதலியனபோல் நினைத்துவிடாமல் விதிவிலக்குகளை ஏற்றுக் குருபத்தியுடன் மெய்யனபனுய்க் கடவுளை வணங்கி அருள்பெற வேண்டும். இதற்கு மாருகச் சிலர் நாடக மாதிரியிற் குருமாராகநடித்தலினுலுந் தர்மகர்த்தா என நடித்தலினுலும் வழிபடுவோராக நடித்தலினுலும் சிவபுண்ணியங்களை இகழ்ந்து வீணுகப் பணங்களைப்படாடோப விஷயங்களிற் செலவழித்து ஆலயங்களைக் கெடுத்து விடுகிருர்கள். சிவனடியார்கள் உண்மைச் சிவனடியாராகத் திருவருளை நாட வேண்டும். ஆலயங்களை உண்மையோடு நடாத்துவதே தர்மம். என்பனவும பிறவுமாக எடுத்துக் கூறிய சாதுரிய போதனைகள் ஆங்கு வந்த அன்பர்கள் உள்ளத்தைப் பக்திவசமாக்கி விட்டன. பின்னர் 10 மணியளவில் தேவாரத்துடன் ஆகமப் பிரசங்கம் முடிவெய்தியதும், சுப்பிரமணியசுவாமி வீதிவலம் வருங் காட்சியும் அன்பர்கள் தரிசனைக்குக் கிட்டியது.

## தாய்மொழியிலே தந்தி

## கனவு நனவாயது

சென்ற சனிக்கிழமையன்று தமிழிலும் சிங்களத்திலும் தந்தி பேசும் வசதி நடைமுறையிற் கொணரப்பெற்றது. தாய்மொழியபிமானம் வாய்வீச்சளவில் நின்றுவிடாது செய்கைமுறையிலும் வந்துவிட்டதென தமிழர்களும் சிங்களவர்களும் உவகை கூருகின்றனர்.

தபால் தந்திப்பகுதி அமைச்சர் திரு. சு. நடேசன் அவர்கள் தாய்மொழியபிமானி என்பதெவருமறிவர். அவரது அமைச்சுவேலையில் இப் போபிமானம் உருவாகியது பொருத்தமானதே.

கொழும்பு மத்திய தபால் நிலயத்தி லிருந்து யாழ்ப்பாணம் காலி குருநாகல் ஆகிய இடங்களுக்கு தந்திகள் கொடுபட்டன.

அமைச்சர் திரு. சு. நடேசன் அவர்களுக்கு நிதிஅமைச்சரும் பிரதமரும் அனுப்பிய செய்திகள் கீழே தரப்படுகின்றன.

கௌரவ திரு. எஸ்.
நடேசன்,
தபால் தகவல் மந்திரி,
பரமேஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்.

25-10-52,
கொழும்பு.

தேசிய மொழிகளில் தந்திகளை அனுப்ப ஆரம்பிக்கும்போது நீங்கள் எனக்கு தமிழில் அனுப்பிய தந்தியைப் பெற்றுப் பேருவகை அடைந்தேன். அரசாங்க கருமங்கள் கூடிய விரைவில் தேசிய மொழிகளில் நடத்துவதற்காகிய எத்தனங்களில் இது ஒரு முக்கிய முன்னேற்றம். இந்த முறை பொதுமக்களுக்கு ஒரு சிறந்த சாதனமாகும்.

டட்லி சேனநாயகா,
பிரதம மந்திரி.

•

கௌரவ திரு. எஸ்.
நடேசன்,
தபால் தகவல் மந்திரி,
பரமேஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்.

25-10-52,
கொழும்பு.

உங்கள் தந்தி கிடைத்தது. உங்கள் பெருமுயற்சி பொது சனங்கள் சிங்களத்திலும் தந்திகளை அனுப்பக்கூடிய மிகச் சிறந்த வசதியை செய்து கொடுத்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த முறை சித்தியடையப் பொதுசனங்களும் உங்கள் துறை உத்தியோகத்தாரும் உங்களுடன் ஒத்துழைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. நீங்களும் உங்கள் துறையினரும் சேர்ந்து அரசாங்க மொழி இயக்கத்தில் கரிசனை காட்டுவதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஜே. ஆர். ஜயவர்த்தனா,
நிதி மந்திரி.

## வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கம்

## சங்கீத விழா

மேற்படி சங்கீதவிழா இணுவில் ஸ்ரீ காளிக்கன் படமாளிகையில் 18-10-52சனிக்கிழமை நடைபெற்றது. வருபெருமாக வித்தியாதிகாரி திரு. K. கிருஷ்ணபிள்ளை அவர்கள் விழாவைஆரம்பித்துவைத்தார். தபால் செய்திப் பகுதி அமைச்சர் உட்படப் பெருந்தொகை ஆசிரியர் மாணவர் ஆதியோர் சமுகமளித்தனர். சங்கத்தலைவர் திரு. S. K. பத்திநாதன் அவர்கள் யாவரையும் வரவேற்று முன்னுரை நிகழ்த்திய பின்னர் பாட்டு நடனம் கும்மி என்னும் பலவேறு விஷயங்கள் மிகச் சிறப்பாக நடந்தேறின. போட்டி விஷயங்கள் முடிவெய்தியதும் வடபெரும்பாக வித்தியாதரிசி திரு. A. சரவணமுத்து அவர்களும் தலைவரும் மத்தியஸ்தர் ஆறுபேரும் மேடைமீதமர்ந்தனர். தலைமை தாங்கிய திரு. A. சரவணமுத்து அவர்கள் தமது தலைமைப் பேருரையில் வலிகாமம் வடக்குப் பகுதியின் கலைவளர்ச்சிச் சிறப்புக்களையும் வித்தியாதரிசி இல்லாமலே வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்கம் இவ்வாண்டில் விடுமுறைப் பயிற்சிக் கழகம், சங்கீதவிழா ஆகிய இவ்விரண்டையும் மிக உன்னதமான முறையில் நடாத்தி முடித்த பெருஞ் சேவையையும் பிறபகுதிகளிற் காணமுடியாத தனிப்பெருஞ் சிறப்புக்களையும் பலபடப் பாராட்டி யுரைத்தனர். இச்சங்கத்தினை நடாத்தும் தலைவர் முதலியோரின் சேவைகளைத் தாம் கண்ணூரக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைவதாகவும் இத்தகைய சீரிய நிகழ்ச்சிகள் தமிழ்ப் பாடசாலைகளில் இருப்பது அபூர்வமான காரியமாகக் கண்டதாகவும் மிக வியந்து பாராட்டினர்.

ஈற்றில் காரியதரிசி பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களால் தனித்தனி எல்லோருக்கும் நன்றி கூறப்பட்டது. சங்கீதவிழாவின் உபசபையாளர்களையும் [illegible] S. K. பத்திநாதன் T. துரைரத்தினம், V. சங்கரப்பிள்ளை, V. நல்லதம்பி என்போருடைய சேவை நலங்களைக் குறித்துப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. போட்டியில் இருபத்தொரு நிகழ்ச்சிகளும் 17 பாடசாலைகளும் பங்குபற்றியமை சங்கத்தின் ஒத்துழைப்பை நன்கு காட்டுகின்றது. போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு தராதரப் பத்திரங்களும் பரிசில்களும் விழாத் தலைவரவர்களால் வழங்கப்பட்டன. போட்டியிற் பரிசுபெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:—

பாட்டு 1-ம் பரிசு சேர் கனகசபை வித்தியாசாலை, 2-ம் பரிசு ஏழாலை தெற்கு அ. மி. பாடசாலை, 3-ம் பரிசு தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை.

நடனம் 1-ம் பரிசு இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை, 2-ம் பரிசு உடுவில் மல்வத்தை R. C. பாடசாலை, 3-ம் பரிசு சங்குவேலி சைவவித்தியாசாலை.

நாடகம் 1-ம் பரிசு அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை, 2-ம் பரிசு சேர். கனகசபை வித்தியாசாலை.

எல்லா விஷயங்களிலும் அதிசிரேட்டம் பெற்றது இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை 'நடனம்' என மத்தியஸ்தர் தீர்ப்பளித்தனர். விழா 3 மணித்தியால நேரத்தில்நிறைவெய்தியது.

### இந்திய அரசாங்க உயர்காரியாதிகாரி

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் உயர்காரியாதிகாரியாக திரு. C. P. N. சிங் அவர்கள் நியமிக்கப்பெற்றிருக்கிருர்.

இவர் நேபாளத்தில் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாய்க் கடமை ஆற்றியிருக்கின்ருர்.

### சென்னைமாநகரம் தமிழ்நாட்டுக்குரியது

அண்மையிலே சென்னையில் நடந்த ஓர் கூட்டத்தில் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் சென்னைப் பிரதமரை ஆந்திரா தனிமாகாணம் ஆக்கப்பெறும்போது சென்னையின் நிலைமை என்னவாயிருக்க வேண்டுமென்று திரு. இராசகோபாலாச்சாரியாரின் வெளி திறந்த உள்ளக் கிடக்கையை உரைக்குமாறு கேட்டுக்கொண்டார். அவ்வமையம் சென்னை நூற்றுக்கு 67 விகிதம் தமிழர்கள் கொண்ட நகரமாகையால் அது தமிழருக்குரியதென்று பிரதமர் பதிலளித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

இந்துசாதனம்

யாழ். நந்தனஹு ஐப்பசிமீ கஉ உ செவ்வாய்க்கிழமை

## தாய் மொழியிலே செய்திகள்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் இயல்பாகவே சிறப்புடையன, சீர்பொருந்தியன, போற்றற்குரியன, பேணப்பெற வேண்டியன. இவ்வியல்பான பெருமையை எவரும் அழிக்கமுடியாதென்பது அண்மையில் இலங்கா தீபம் அந்நியர் ஆட்சியினின்றும் விலகியமையும் தமிழ் சிங்களம் முதலியன மக்கள் ஆட்சியில் மங்கலகரமான நிலைமையை அடைந்தமையும் நனகு காட்டுகின்றன. இக்காலத்துக்கேற்ற முறையில் யந்திர சாதனங்களின் உதவிகொண்ட வாழ்க்கை வசதிகள், பழையன வற்றைப் பேணி நிற்கும் இந்திய ஈழ நாடுகளின் தாய்மொழி விருத்திக்குப் பொருத்த மாகாதெனக் கருதுவாருமுளர். ஆனால் செம்மொழியாகும் எம்மொழியும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எத்துறையிலும் ஏற்றதாகவே இருக்கும் என்பது கற்றோர் துணிபு. இதற்குகந்த உதாரணமாகச் சென்ற வாரத்தில் நடைமுறையிலே கொணர்விக்கப்பட்ட தாய்மொழித் தந்திச் சேவையை எடுத்துக் கூறலாம்.

இந்த நாட்டிலே எக்கருமமும் தாய்மொழியிலே நடைபெற வேண்டுமென்பது முடிவு பெற்றதோர் அரசவைத் தீர்மானம். ஆனால் இந்த நிர்ணயத்தைச் செய்கை முறையிலே கொண்டுவருவதற்கு வேண்டிய ஒழுங்குகளைப் பரிசீலனை செய்யும்பொழுது அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ஈழமெங்கணும் தமிழுஞ் சிங்களமும் ஒரு தாய் வயிற்றுதித்த இரட்டை மகவார் போன்று பெற்றூரால் உற்ற அன்புக்கும் உறுகவனத்துக்குமுரியனவாயிருத்தல் அறநெறி என்றளவில் நிற்பதோடமையாது உலகியல் வழக்குக்கு நலந்தரும் வழி என்பதுவும பெறப்படுகின்றது. இந்த இடத்தில் அண்மையில் கல்விக்கழகத் தலைமை பூண்டோர்களுள் அநுபவமிக்காரொருவர் தமிழுஞ் சிங்களமும் இந்நாட்டவர்கள் யாவராலும் அறியப்படவேண்டியனவென்றும் அவ்வாறில்லாதவழி மக்களிடை ஒற்றுமை உணர்ச்சி ஓங்காதென்றும் தமிழர்கள் நிலை

# உள்ளமும் உடலும் தூய்மை கொள்க!

## யோகிகளின் அறிவுரைக்கொத்து

### ஸஹிருக் கல்லூரியில்

சுத்தானந்த அடிகளைச் ஸஹிருக் கல்லூரித் தமிழ்ச்சங்கத்தார் வரவேற்றனர். அங்கே பேசும்பொழுது அவநம்பிக்கையால் வருந்துகின்ற இக்கால மக்கள் கடைத்தேறுவதற்கு திருநபிநாயகம் முகம்மது அவர்களின் போதனைகள் பெரிதும் உதவியாயிருக்கின்றன. இஸ்லாம் சமரச நோக்கமுடையது. சமத்துவம் அதன் அடிப்படையான கொள்கை. முஸ்லிம்களுக்கு ஆண்டவனிடத்தில் அசையாத நம்பிக்கையுண்டு. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இஸ்லாம் சமயத்தில் சமஉரிமையுண்டு. பெண்களுக்குச் சமஉரிமை கொடுக்கமறுக்கும் நாடு முன்னேறமாட்டாது. என்று பாரதியார் கூறினர்.

### ஹெந்தலையில்

ஹெந்தலை தொழுநோய் வைத்திய நிலயத்தில் நிலயத்தலைவர் Dr. பர்ணாந்தோ முதலியார் சுவாமிகளை வரவேற்றனர். அங்கே சுவாமிகள் பேசும்பொழுது இந்நோயாளரை இயற்கை வைத்திய முறையாற் சுகமாக்கியிருக்கிறேன். நாள்தோறும் மலச்சிக்கல் தவிர்க்குமாறு காலையில மலசலங் கழித்துப் பல் துலக்கி தேகத்தைச் சுத்தமாக்க வேண்டும, சூரியஸ்நானம் அரைமணித்தியாலத்துக்குச் செய்தல் வேண்டும். நோயுள்ள இடங்களிற் களிமண் அப்பிச் சிறிது நேரத்தின் பின் சுத்த நீராற் கழுவ வேண்டும். மண் நோய்க் கிருமிகளை நீக்கும். இரவில் ஆவரை இலை அரைத்துப் பூசவேண்டும். பதினைந்து நாட்களுக்கொருமுறை உபவாசமிருத்தல் வேண்டும். பதினைந்து நிமிடங்களுக்காவது கடவுளைத் தியானித்துத் தேகசுகம் தருமாறு வேண்டுதல் செய்ய வேண்டும்! இத்தகைய மனச்சுத்தம் தேகசுத்தம் பயின்றுவர நோயகலும, என்று நோய் நீக்கும் இயற்கை வைத்திய முறையை எடுத்துக்கூறினார்கள்.

### வெலிசறையில்

வெலிசறை காச நோயாளர் வைத்திய நிலயத்திற் பேசும்பொழுது நல்ல காற்றுள்ள இடத்தில வசித்துக் கோபம் முதலியன நீக்கி, மனச் சாந்தியுண்டாக்கிக் கடவுளைத் தியானித்துத் தூய வாழ்க்கை வாழுமாறு புத்திமதி புகட்டினர். இவற்றை அநுட்டித்தால் இந்நோயே அணுகாதென்பது அடிகளின் கருத்து.

### மருதானை பால செல்வ விநாயகர் ஆலயம்

மருதானை பாலசெல்வவிநாயகர் ஆலயத்திலே கதிர்காமத் தொண்டர்சபையும் சைவசமய முன்னேற்றச்சங்கமும் சுவாமிகளை வரவேற்றன.

அத்தருணம் பேசும்பொழுது ஒவ்வொருவரும் நாள் தோறும் பதினைந்து நிமிடங்களுக்காயினும் காலை மாலை கடவுளைத் தியானித்தல் வேண்டும், வாழ்க்கையைச் சிவார்ப்பணம் செய்ய வேண்டும் என்று அடிகள் அறவுரைகள் கூறினார்

### இந்து சன்மார்க்க சங்கம்

ஹனுப்பிட்டி இந்துசன்மார்க்க சங்க வரவேற்புக் கூட்டத்திற் பேசும்பொழுது ஐந்தாங்குரவராகிய ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் இந்த நாட்டிலே அவதரித்துத் தமிழுக்குப் புத்துயிரளித்தார். அவர் அவதரித்திலராயின் புராணங்கள் சைவ நூல்கள் எங்கே? அவருடைய பெயரால் ஒரு கல்லூரியை அமைத்து அவருடைய கொள்கைகளைப் பரப்பவேண்டும். சைவ சமய உண்மைகளை பிற உலக மொழிகளில் வெளியிட வேண்டும். சமய வாதங்களில

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# காவலன் கடாவுகின்றது!

## நேயரின் நெய்யரி மரபு...

'சாதனம் தொடங்குகின்றது' என்று வண்ணைவாசன் 23-10-52 ல் வெளிவந்த சத்தியவேதபாது காவலனில் நூதனம் ஒன்று நுழைந்து கண்டெழுதி அகமகிழ்கின்றார். வண்ணை வாசன் வண்ணைக்கும் பத்திரிகை உலகுக்கும் புதியவர்போலும்? இன்றேல் இந்துசாதனத்தின் நோக்கத்தை ஆசிரிய வசனங்களில் ஆராயாது செய்திகளிற் றேடார் காமாலைக் கண்ணன் கண்டதெல்லாம் மஞ்சளாமெனக் கலங்குவது போல தனிச் செய்தியை எடுத்து இந்துசாதனத்துக்கும் கத்தோலிக்க குருமாருக்கும் இடையே ஏதோ இருக்கின்றதெனக் கணக்கண் டெழுந்து கனல் போற் சினக்கின்றார்! செந்தமிழ் மரபும் தெய்வநெறியுஞ் சிறந்து விளங்குவது இந்துசாதனம் என்பதை எம வண்ணைவாசன் அறிந்தாலென்ன அறியாதுவிட்டால் என்ன. ...........

நிற்க, பத்திரிகை நிருபர் ஒருவர் எழுதியனுப்பிய செய்தியில Very Rev. Fr. T. M. F. லோங் என்றிருந்ததை இந்துசாதனச் செந்தமிழ் மரபுக்கியைய எங்கள் அநுவதிப்பாளர் ஆங்கிலச் சொற்களை நீக்கி 'லோங் சுவாமியார்' எனத் திருத்தியமைத்தார். இத்திருத்தம் அவதானிக்கப்படாமைக்கு அச்சகப் பைசாசத்தின் (Printers Devil) அட்டூழியமே காரணமெனபதைக் கூறவேண்டியதில்லை. இதற்கு மிகமிக மனம் வருந்துகின்றோம்.

ஆனால், வல்லடி வழக்கைச் சோலலடி மாமி என்ற மரபில் வண்ணைவாசன் பத்திரிகை வாசகர்களுக்கு தம மாபெண்ண வென்றதையும் வெளிப்படுத்திவிட்டார். நெய்யரி முறையிற் கைதேர்ந்தவர்போலும். இவர் பத்திரிகை மரபு விளக்கிக் கூறத் துணிந்தமை மாறு கண்ணை நேர்மையைக் கோணலாகக் கண்டவாறு என்க. வண்ணை வாசன் நெய்யரி நிதியைச் சேகரிப்பதோடு சிறிது அச்சகப் பைசாசத்தையும் அறிந்து கொள்வாராக. பத்திரிகை நேயர்களுள் அன்னம் போல்வாரும் கருமகன் போல்வாரும் உளர்.

நிற்க, குருமார் குற்றமேற்கின்றனர் என்ற செய்தியை இந் நெய்யரி நேயர் இந்துசாதனத்தில் மாத்திரந்தான் கண்டாரா? பாதுகாவலனும் இந்துசாதனமுமே இவ்வுடைய பத்திரிகைஉலகுபோலும்! நன்று. மிகநன்று.

சாதனம் தொடங்குகின்றதா, காவலன் தொடக்குகின்றதா?....

ப—ர்.

# பொதுவுடைமை மதிவளம்!

வண. சுவாமி தனிநாயகம் அவர்கள், அமெரிக்காவிலிருந்து எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றிலிருந்து பின்வரும் பகுதியை இந்நாட்டுத் தமிழ் வாசகர்கள் உணருமாறு பிரசுரிக்கும் வண்ணம் வேண்டுகிறேன்.

எனக்குச் சக்திபிருக்குமாயின் (1) "முகமற்ற மனிதர்" (2) "தோல்வியடைந்த தெய்வம்" (3) "நான் விடுதலையைத் தேர்ந்தேன்" (4) "மஸ்கோவின் படையெழுச்சி" முதலிய நூல்களை எங்கும் பரப்ப விரும்புகின்றேன், இந் நூல்கள் பொதுவுடைமை எவ்வளவு தூரம் பொய்மையின பிதாவுக்குப்பிள்ளை என்டதையும், மனிதர் எங்ஙனம் உண்மை உணர்ந்தனர் என்பதையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் இந்நூல்கள், நம்நாட்டு மொழிப் பத்திரிகைகளில் பாப்பாண்டவரைப் பற்றியும், குருமார் கூட்டத்தின் கற்பொழுக்கத்தைப்பற்றியும் கண்டித்து எழுதப்படும் கட்டுரைகள், "வேலைக்காரி" முதலிய பேசும் படங்கள் கறுப்புச் சட்டை இயக்கம் முதலியன தமிழ்நாட்டிலே 'கொம்மியூனிசம்(பொதுவுடைமை) நுழைக்கப்படுவதற்கு இயற்றிய நீண்ட காலத்திட்டங்களுள் ஒருபகுதி என்பதைக் காட்டும். நீண்டகாலத்திற்குமுன் நிகழ்ந்த ஒரு குறுகிய சம்பாஷணையில, C. N. அண்ணாத்துரை தாம் சமயத்தின மீது விரோதம் அற்றவர்; "ஸ்தாபன ரீதியான சமயத்" [illegible] ருக்கு எதிரியலலர்; பிறப்பினுல் [illegible] கலாநிதிகளாகி விடும் பிராமணருக்கே தாம் பகைவர் என்றும் குறிப்பிட்டார் எனது பதில், அவர்கள் அதுவாயின் இந்துமதத்தைச் சீர்திருத்தி, அதிலுள்ள குறைகளை நீக்குவதைவிடுத்து, நிரீச்சுரவாதத்தைப் பரப்புவது ஏனோ என்பதே. அண்ணாமலை சர்வகலாசாலையிலுள்ள பொதுவுடைமை வாதிகள் தார்பூசிட்ட வீதிகளில் பெரிய வெண்ணெழுத்துக்க

— 'ஸ்ரீ' —

ளில், ' "எதிர்காலம் விஞ்ஞானத்தில் நம்பிக்கையுடையோருக்கே அன்றி, கடவுளில் நம்பிக்கை வைப்போருக்கு உரியதன்று" என எழுதுவது வழக்கம். அச் சர்வகலாசாலையில நடைபெறும் வேலை நிறுத்தங்கள் பல வெளிமனிதரால் நடத்தப்படுவன. இம்மனிதர் உணர்ந்தோ உணராமலோ பொதுவுடைமை யாட்சிக்காக நடத்தப்படும் உலக இயக்கத்திற பங்குடையோரே. இராமாயணத்தைப்பற்றிய துவேஷ ஆராய்ச்சியிலோ, அன்றி இந்து மதத்திலுள்ள மூடநம்பிக்கைகள், குறைகள் என்பவற்றைக் கேலி செய்தலிலோ ஈடுபட்டுள்ளவர்கள் செம்மையிலுள்ள ஓர் நோக்கத்தை நிறைவேற்றும் பங்கைச் செய்கின்றனர். அதாவது நம்பிக்கையின் அத்திவாரங்களைத் தகர்த்து, எச் சமயத்தவர்களையும் பரம்பொருளில் நம்பிக்கை கெடுத்துக் கேலி செய்து விடுதலேயாம்.

வலிமை மிக்க மொழிகளில் சுவாமியவர்களால் கண்டிக்கப்படும் இவ்விஷ இயக்கம் எம் மாணவரைப பற்றவிடாது தடுக்கும் கடமை பாடசாலை ஆசிரியர்களை வருக்கும் உள்ளது, சமயம் கல்வியின் அடிப்படையாக இருந்த நிலை மாறுகின்றது. விஞ்ஞானமும் பிற பரீட்சைப் பாடங்களும் பாடசாலை நேரத்தைப் பகிர்ந்து கொள்ள, மாணவன் உள்ளம் பண்படாத காடாகக் கிடக்கின்றது, கொடிய பாம்புகள், விலங்குகள், அதனுள் குடிபுகுகின்றன. இதனுல் மாணவர் உலகில் நுழைந்ததும் - பொருளாதார சுதந்திரம் பெற்றதும் - பெற்றோர், உறவினர், குரு முதலியோரை மதியாது தம் மனம் இழுத்துச் செல்லும் வழியே ஒழுகி வாழ்வைப் பாவமும் துன்பமும் நிறைந்ததாக்கிப் பிழை எங்குளது என அறியாது பிறரை நொந்து மாய்கின்றனர். முக்கியமாகக் கிறிஸ்துமத பாடசாலைகளில் படிக்கும் பிறமதச் சிறார் தாம் நல்வாழ்வுக்கு வழி தெரியாமல் தவிப்பதுடன் இந் நூல்களைப் படிக்கவும் தீநெறியிற் செல்லவும் தம் தோழர்களான பிற மாணவருக்கும் வழிகாட்டுகின்றனர். ஆகவே அவர்கட்கு நீதி நூல், சமயநூல் போதித்தல் அவசியமாகின்றது. மேலும் ஆசிரியர்கள் வெறும் சமய நம்பிக்கையுடையோராக மாத்திரம் இருக்காமல், சமய பக்தியைத் தம் மாணவருக்கு ஊட்டக்கூடிய முறையில் வாழ்ந்து காட்டுவாராக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் நீக்கும் வினை

## உரைக் சொணுப் பாதகம்

"கொல்லான் புலாலை
மறுத்தானைக் கைகூப்பி
யெல்லாவுயிருந்தொழும்"

என்பது திருவள்ளுவப் பெருந்தகையின் திருவாக்கு. பஞ்சமா பாதகங்களுள்ளே மிகக் கொடிய பாதகம் கொலையாகும். இக்கொலையைச் செய்வதற்குக் காரணமாயுள்ளது மாமிச போசனமாகும். மக்கள் மாமிசத்தை அருந்துவது காரணமாகவே உயிர்க்கொலையும் தோன்றியுள்ளது. மாமிச போசனத்தை மக்கள் செய்யாது விடுவார்களேயானால் உயிர்க்கொலை செய்தலும் உலகில் நடைபெறமாட்டாது.

எல்லாப் பிராணிகளையும் உண்டாக்கினவர் கடவுளல்லவா? அவருக்குப் பிராணிகள் யாவும் பிள்ளைகளாகவல்லவா இருக்கின்றன. பரமபிதாவாகிய பரம்பொருளுக்குச் சீவன்களைக் கொலை செய்தல் சம்மதமாயிருக்குமா? அவராலே கொலைப் பாதகர்களுக்கு அளவிறந்த தண்டனை கிடைக்குமல்லவா? அன்பர்களே! இது எவ்வளவு அறியாமை! நாம் மாமிச போசனம் அருந்துவதால் இறைவன் படைத்த உயிர்களைக் கொலை செய்யவேண்டி நேரிடுகின்றது. இத்தகைய கொலைப் பாதகச் செயலை நீக்குவோமானால் பல்லாயிரக் கணக்கான சீவன்கள் உயிருடன் வாழவைத்த பாக்கியத்தைச் செய்தவர்களாவோம். 'எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கவுநின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'' என்னும் தாயுமான சுவாமிகளின் கருணை வாக்கின்படி ஒழுக விரும்புவோமானால் ஆண்டவன் திருவருள் தேடாமலிருக்கத் தேடிவரும்.

எமக்கு ஓர் எறும்பு கடித்தால், அல்லது வேறு கொப்புளம் ஆதியன வந்தால் நாம் எவ்வளவு துடிதுடிக்கின்றோம். அங்ஙனம் துன்பப்படுவதை நாம் விரும்பவில்லை. அதுபோலவே ஆடு, கோழி முதலாம் சீவன்களும் துன்பப்படுவதை அறபமேனும் விரும்பமாட்டா. அவ்வாறு துன்பத்தைச் சகியாத பிராணிகள் கொலை செய்யப்படுவதைச் சகிக்குமா? கொலை செய்யும்போது அவைகள் படுந்துன்பமோ அளவிடற்கரிது. அங்ஙனம் அவைகள் துன்பப்படுவதையும் அவைகளைக் கொலை செய்வதனால் அடையும் பாவத்தையும் கீழ்வரும் பாடல்கள் மிகத் தெளிவாக எடுத்து இயம்புகின்றன.

"அம்மா வெனவலற
ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மா னுடரெல்லா
மின்புற் றிருக்கின்றர்
அம்மா வெனுஞ்சத்தங்
கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரய மென்றுற்
புசித்தவர்க்கென் சொல்லு
வதே''

"தன்னுயிர் நீப்பினுந்
செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.''

—திருக்குறள்.

மக்களாகிய நமக்கு நமது சரீர அமைப்புக்கு ஏற்றது தாவர உணவேயாகும். இது பெரியோர் கண்ட பேருண்மையாகும். இதனை நாமெல்லோரும் முற்றாக மறந்துவிட்டோம். உதாரணமாக நாம் சிங்கம், புலி முதலிய மிருகங்களை நோக்குவோம். அவைகளுடைய சரீரம் கடின வஸ்து உண்பதற்கென்றே அமைக்கப்பட்டிருக்கின்றது. பசு முதலிய மிருகங்களுடைய சரீரம் தாவர உணவுக்கென்றே அமைக்கப்பட்டிருக்கின்றது. தாவர உணவை உட்கொள்ளும் பசுவை மாமிச உணவை உட்கொள்ளச்செய்யமுடியாது. ஆனால் விசேட சிருட்டியாகப் பிறந்த மக்கள் அதிலும் - சைவ மக்கள் எனப்படுவோர் மாமிசம் தாவரம் என்னும் இரண்டையும் புசிக்கின்றார்கள். என்னே இவர்களின் அறிவின்மை இவர்களின் அநீதி! இவர்களை மக்கள் என்று சொல்லுவதா? அல்லது மாக்கள் என்று சொல்லுவதா?

"கொல்லா விரதங் குவலயமெல்லாமோங்க எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே'' என்பது தாயுமான சுவாமிகளின் தனிப்பெருவாக்கு. இதற்கு நேர் மாறாகச் சைவமக்கள் குவலயமெல்லாம உயிர்க்கொலையே செய்கின்றார்கள். சைவ ஆலயங்களிலேயே கோடிக்கணக்கான சீவன்களைக் கொலை செய்கின்றார்கள். ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் எனக் கேட்டால் ஆண்டவனுக்குப் பலி செய்கின்றோம் என்கிறார்கள். ஆண்டவனுக்குப்பலி செய்யவேண்டியவைகள் நமது உடல், பொருள், ஆவி என்னும் மூன்றுமேயாகும். இதை

**ஸ்ரீ சி. கணேசலிங்கஐயர்**
**தெல்லிப்பழை.**

விட்டு உயிர்க்கொலை செய்வோமானால், ஆண்டவனின் அளவிறந்த நரக தண்டனைக்கு ஆளாவோம். எமக்கு எவ்வகையான சாந்தியும் கிடைக்கமாட்டாது. இதனைப் பின்வரும் பாடல் தெளிவுறக் கூறுகின்றது.

"கங்கையிற் படிந்திட்டாலுங்
கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடிதானம்
வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாதஞான
தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன்
போய்நரகடைவனன்றே''

—பதி பசு பாச விளக்கம்.

### சர்வோதய ஆச்சிரமம் நீர்வேலி

மேற்படி ஆச்சிரமத்தில் 31-10-52 வெள்ளிக்கிழமை காலை விவசாயவேலை ஆரம்பிக்கப்பெறும். முதலில் பொன்னுவரை, பருத்தி முதலியன நாட்டப்படும. அன்றுமாலை 5 மணி தொடக்கம் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். பின்னர்ப் பகிரங்கக்கூட்டத்தில் இணுவில் ஸ்ரீ க. வடிவேல் சுவாமி அவர்கள் 'கடவுளும் மனித கிலேயும்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவாரென ஷெ சங்கக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

எங்கள் சைவ ஆகமங்கள் எல்லாம் உயிர்க்கொலை செய்தல் மாமிசம் புசித்தல் ஆதியன மகா பாதகங்கள் என்று கூறுகின்றன. இவைகளை நாம் சிந்தியாது நாடு முன்னேற்றம் அடைந்து வரும் இக்காலத்திலும் சைவ ஆலயங்களில் ஆயிரக்கணக்கான ஆடு, கோழிகள் பலியிடுவதைக் கண்டும் வாளாவிருப்பது முறையன்று. எனவே சைவப் பெரியார்கள் அறிஞர் பெருமக்கள் இவ்விஷயத்தில் முன்னின்று மக்களுக்கு நல்லறிவைப் புகட்டி, இம் மூடக் கொள்கையை நாட்டில் இல்லாது செய்ய வேண்டும். சைவ மக்கள் அனைவரும் மாமிசம் அருந்துவதை நிறுத்த வேண்டும், அங்ஙனம் மாமிசம் புசியாது விடுவார்களேயானால உயிர்க்கொலையும் நாட்டில் இல்லாது நீங்கிவிடும். எல்லாச் சீவன்களும அன்பாகவும் சுகமாகவும் வாழும். மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும்.

### வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

**62 வருடங்களுக்கு முன் நிகழ்ந்த நூற்றாண்டுப பூர்த்தி விழா**

வண்ணை வைத்தீசுரன் கோயில்: "இக்கோயிலின் நூறும்வருட மகாபிஷேகம் முன் நம் பத்திரிகையில் வெளிப்படுத்தியவாறு குறித்த தினத்தில் வெகு சிறப்பாக நடந்தது. அன்று முதல் இரவில் அலங்காரத் திருவிழா நடந்து வருகின்றது. இவ்விஷயத்துக்காகப்பெருந் தொகைப் பொருள் சேர்த்துச் சிறப்பாக நடத்தினவர்கள் வித்துவசிரோமணி ஸ்ரீ. ந. ச. பொன்னம்பலபிள்ளை ஸ்ரீ சித மு. பசுபதிச் செட்டியார் ஸ்ரீ கு. சபாபதிச் செட்டியார் முதலானவர்களே.''

இ. சா. 7—5—1890.

### கமத் தொழிலாளர் சங்கம்

கமத் தொழிலையே தங்கள் சீவியத்துக்குரிய தொழிலாகக் கொண்டுள்ளவர்கட்கு ஏற்பட்டு வருகிற கஷ்டங்களை நீக்குவதற்குரிய ஒழுங்குகளைப்பற்றி ஆலோசிக்கும் பொருட்டுக் கமத்தொழிலாளரின் மாபெருங் கூட்டம்.

2-11-52 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சைவ மகாசபை மண்டபத்தில் நடைபெறும் ஆன்பர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இ நாகலிங்கம்
காரியதரிசி

காரைநகர்
27—10—52.
M 147 28—10—52.

### அறிவித்தல்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 383-ம் இலக்கவழக்குத் தீர்வையின்படி நாவற்குழிக் கோவிற்பற்றில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சித்திர வேலாயுதசுவாமி கோவிலில் கிரமமாக வழிபடுவோர் தங்களுக்குள் இரு டிரஸ்ரிகளைத் தெரிவு செய்யும் உரித்துக் கொடுத்திருக்கிறபடியால் 1952-ம் ஆ கார்த்திகைமீ 2-ம் (2-11-52) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் 6 மணி வரைக்கும் குறித்த கோவிலில் கிரமமாய் வழிபடுபவர்களுடைய ஓர் கூட்டம் நடைபெறும், அக் கூட்டத்துக்குக் கோட்டுக் கட்டளைப்படி சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டுச் சக்கடத்தார் A. நடராசா அவர்கள் தலைமைவகித்து, குறித்த டிரஸ்ரிகள் தெரிவு செய்ய வேண்டுமென்று கோட்டுக் கட்டளை.

அத்தருணம், குறித்த கோவிலில் கிரமமாக வழிபடுவோர் எல்லோரும் சமுகந்தந்து குறித்த தெரிவில் பங்குபற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கோட்டுக்கட்டளைப்படி,
A. Nadarajah,
சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டுச் சக்கடத்தார்
சாவகச்சேரி டிஸ்திறிக்கோடு,
சாவகச்சேரி,
18—10—52.
M. 145 28, 31—10—52.

### சற்பிரசங்கம்

இன்று காரைநகர், வியாவில் சைவபரிபால வித்தியாசாலைத் திருநாவுக்கரசுநாயனார் மண்டபத்தில், தலைமையாசிரியர் பண்டிதர் சு. இராமசாமி அவர்கள் 'சூரசங்காரம்'' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு ஒரு சிறந்த பிரசங்கஞ் செய்தனர். தொடக்கத்தில் "தோடுடைய செவியன்'' என்னுந் தேவாரப்பொருளை விளக்கிய பின், புராணங்களின் தத்துவம் யாது என்பதையும், கந்தஷஷ்டி விரத காரணத்தையும் பயனையும் இறுதியில் 'சூரன் போர்' என்னும் விழா நடப்பதன் காரணத்தையும் விளக்கிப் பேசினர்.

### சமுதாயப்பொருளாதாரம்

**காந்தியடிகளின் கருத்து**

சமுதாயப் பொருளாதார சாஸ்திர மென்பதற்கு உரிய காலத்தில் தேவையானவையும், கனமும பயப்பனவையுமான பண்டங்களை உற்பத்தி செய்தல், அவற்றைப் பாதுகாத்தல், அவற்றை விநியோகித்தல் என்பதே பொருள. பருவ காலத்தில் பயிர் விளைவித்து அறுவடை செய்யும் குடியானவனும், உறுதியாகவும ஒழுங்காகவும் சுவர் எழுப்புங் கொத்தனும், சிறந்த முறையில் மரவேலைகளைச்செய்யுந் தச்சனும், சமையல் அறையைச் சரியாக வைத்து நிர்வகிக்கும் பெண்ணும் உண்மையான பொருளாதார சாஸ்திரிகளென்றே கருதப்பட வேண்டும். இவர்கள் அனைவருமே நாட்டின் செல்வத்தைப் பெருக்குகிறார்கள்.

### சுவர்ப் பிரசாரம்

காரைக்குடியில் ஸ்ரீ இராசகோபாலாசாரியாரவர்கள் 24-10-52ல் பேசும்பொழுது வீடுகளின்வெளிச் சுவர்களில் தேர்தற் பிரசாரங்கள் விளம்பரங்கள் ஆதியன எழுதுதல் நிறுத்தவேண்டும். அது வீட்டினதும் நாட்டினதும் அழகை ஒழிக்கின்றது. ஒருவருடைய வீட்டின் வெளிச்சுவரில் வீட்டுக்காரனுடைய உத்தரவு அல்லது பட்டினசபையாருடைய உத்தரவு இல்லாமல் யாரும் எதையும் எழுதக் கூடாது என்று கூறி இதை நிறுத்துதற்குச் சட்டம் அமைப்பதைத் தாம் விரும்புவதாகத்தெரிவித்தார்.

### தென் ஆபிரிக்க செய்திகள்

ஜொஹன்னிஸ்பேக் விற்வாரஸ் ரூண்டசர் சர்வகலாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. H. R. றெயிக்ஸ் வெள்ளை மாணவர், சட்டமறுப்பு இயக்கத்துக்கு ஆதரவு கொடுப்பதை மிகக் கண்டித்துப் பேசுகையில் சர்வகலாசாலைக் கல்வி ஒழுங்கில் நிற வேறுபாடு இல்லாதிருக்கின்றது. அது சமூக வேறுபாட்டை இல்லாமற் செய்யுமாயின் அதையும் நிறுத்த வேண்டும் என்று கூறினர்.

X X X

பிரித்தானிய அரசியல் வாதிகள் தென் ஆபிரிக்க விஷயத்தில் நடவடிக்கை எடுக்க அஞ்சுகின்றனர். ஐக்கியதேசியமகாநாட்டில் இதைப்பற்றி ஆராய்வதற்குச் சம்மதங் கொடுத்துவிட்டு இவ்வாறு அஞ்சி நிற்றல் சரியல்ல என்று இராசா ஸ்ரீ மஹாராஜ்சிங் அவர்கள் பிரித்தானியரைக் கண்டிக்கிறார்.

X X X

நேட்டால் ஐக்கியகட்சித்தலைவர் திரு டக்லஸ் மிற்செல் அவர்கள் இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் இவ்விஷயத்தில் ஆராய்ச்சிப் பேச்சு உடனே தொடங்குமாறு மலான் அரசாங்கத்துக்குப் புத்திமதி புகட்டுகிறார்.

X X X

அகில இந்தியசாதி ஒற்றுமைச் சபைத் தலைமைப் பேருரையிலே சேர். C. P. இராமசுவாமி ஐயர் அவர்கள் ஐக்கிய தேசிய மகாநாட்டுக் காரியதரிசி ஸ்ரீ ரிறைக்லை அவர்கள் தம்மால் தென்ஆபிரிக்க விஷயத்தில் ஒன்றும் செய்யமுடியவில்லை என்று வெளிப்படையாய்க் கூறுகிறார், தென் அபிரிக்க பிரதம மந்திரி Dr மலான்பிராஞ்சியருடைய ஒற்றுமையைப் பெற்று அவர்களுடன் ஒருமுகப்பட்டு இவ்விஷயம் ஐக்கியதேசியமகாநாட்டார் தங்கள் ஆராய்ச்சிக்குள்ளடுப்பராயின் ஐக்கிய தேசியமகாநாட்டுச் சாதனமே கிழித்தொழிக்கவேண்டுமென்கிறார் என்று கூறி ஆபிரிக்க அரசாங்க முறைகளைக் கண்டித்தார்.

# உள்ளமும் உடலும் தூய்மைகொள்க!

2-ம் பக்கத் தொடர்ச்சி

வீணாகத் தலையிடவேண்டியதில்லை. என்று மதிமொழிகள் கூறினர்.

**அன்புமார்க்க சங்கம்**

கொழும்புலையார்ட்ஸ்புரோட்வே அன்பு மார்க்க சங்க வரவேற்பிற் பேசும்பொழுது அன்பே கடவுள். மக்களுக்குத் தொண்டாற்றுதலே சிறந்த அறம். மக்கள் சடைத்தேற உழைக்கும் சங்கங்களெல்லாம் அன்பு மார்க்கத்தனவேயாகும். என்று அன்புரைகள் பல வழங்கினர்.

**ஸ்ரீநாராயண குருசாமி மண்டபம்**

ஸ்ரீ நாராயண குருசுவாமிமண்டபத்தில் "முகம்மது நபி நாயகம் அவர்களின் ஞானோதயம்'' என்னும் பொருளிற் பேசும்பொழுது நபிநாயகம் அவர்கள் தியானத்தால் முத்தியடைந்தோரிலொருவர். திருகூரானிலே உலக சகோதரக் கொள்கை மிளிர்கின்றது. எந்தச் சமயத்தவரும் கடவுளை வணங்க வேண்டும் என்ற சமரச ஞான உரைகள் கூறினர்.

**புகையிரதப்பகுதி**

புகைரதப் பகுதியார் சேர். ஜேன் கொத்தலாவல தலைமையில் வரவேற்றபொழுது, மக்கள் வரவுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும். வீணான எண்ணங்களை எண்ணி வீண் செலவு செய்தல் கூடாது என்று புத்திமதிகள் கூறினா.

**கண்டியில்**

கண்டி மக்கள் சார்பில் நகர சபை சுவாமிகளை வரவேற்றது. திரு. E. L சேனநாயக அவர்கள் தலைமை வகித்தார்.

சுவாமிகள் பேசும்பொழுது பௌத்த மதத்துறையில் இலங்கையே ஆசியநாடுகளுக்குத் தலைமை வகிக்கும், இந்தியாவில் பௌத்த மதம் இல்லையென்பதுகவர்கள் சொல்வது இது சரியல்ல. பௌத்த மதத்துக்கு இந்தியா கொடுத்திருக்கும் இடம் எது என்பதை இந்திய தேசியக் கொடியிலமைந்திருக்கும் தரும சக்கரம் காண்பிக்கும். புத்தபகவானது போதனை இன்றைய உலகுக்கு ஓர் சஞ்சீவியாகும்.

மனத்தை ஒரு நிலைப் படுத்தி ஆண்டவனை பக்திபண்ணவேண்டும. மக்களுக்கு தீங்கிழைத்தலைத் தவிர்க்க வேண்டும். உலக சமாதானத்துக்கு உதவுவதை உவந்து செய்ய வேண்டும். ஒற்றுமையாக வாழும்போது உள்ளங்கள் சாந்தியடைகின்றன என்று கூறினர்.

**கொழும்பு விவேகானந்தசபை**

கொழும்பு விவேகானந்தசபையாரின் வரவேற்புரைக்கு விடையாகச் சுவாமிகள் பேசும்பொழுது வேதாந்தம் ஒளியைக் குறித்தால் சித்தாந்தம் ஒளியின் ஆதிகர்த்தாவைக் குறிக்கும! அதைப் பூரணமாய் அநுட்டித்துச் சித்தி பெற்றவன் உலகத்தை ஆகாயக கப்பலிலிருந்து பார்த்தறிவது போல் எல்லாவற்றையும் பூரணமாய்ப் பார்த்தறிவான். நாற்பது வருடம் தவஞ்செய்து இதையறிந்தேன்.

**சைவசித்தாந்தம் சர்வசமயங்களையும் தன்னகத்தேகொண்டது.**

யாகமென்பது தியானமாகும். மந்திர செபம் மிகுந்த மனச் சுத்தத்தைத் தரும். காலைக் கடன் முடித்துப் புனிதமாய் "ஓம் சிவா சுத்த சக்தி'' என்னும் மந்திரத்தை ஆறு மாத காலம் செபம் பண்ணவேண்டும். அதன் பின் தியானமும் யோகமும் எமக்குள்ளேயிருக்கும், சிவசக்தியை வளர்த்து ஆசையை அறுக்கும மக்கள் ஒவ்வொருவரும் இருபத்துநாலு ஆண்டுகளுக்கு பிரமச்சரிய விரதம் அநுட்டித்து அறிவு விருத்தி செய்து அதன் பின் இல்லறம் புகுதல் வேண்டும். காமத்தை அடக்குவதனுல் மனிதன் மனிதனுகின்றான். தமிழனுக்கு மற்றெந்தச் [illegible] விருத்திசெய்ய வேண்டும். என்று உன்னத அறிவுரைகள் கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீங்கள் இளமைப் பருவத்தையடைய

சி. எம். சாமி

# தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதிஅற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷய்ம முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16, 25-4-52—25-10-52.


சமயப் பிரசாரம்;

## திருமூல நாயனுர் குருபூசை

நாள்: நந்தன ஐப்பசி கசுஉ (1.11-52) சனிக்கிழமை

நேரம்: மாலை 6 மணி.
இடம்: சைவபரிபாலனசபை சைவாச்சிரம நாவலர்மண்டபம்

நிகழ்ச்சி: கடவுளாராதனை

2. சிவநாமமோதல் — இணுவில் காரைக்காட்டுச் சிவன்கோவில் பஜனைக் கோஷ்டியார்

3. பிரசங்கம்: 'திருமூலநாயனுர்' திரு. வே. சோமசுந்தரம்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
27—10—52.

M 145 28—10—52.


சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

# சுசீலாவின் காதல்

யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆு
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை

சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்



| திறமான | திறமான |
| --- | --- |
| தேக்க மரங்கள் | ருணிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிறேட், யாழ்ப்பாணம்.

Std. 2


# மணிவாசகமே திருவாசகம்

திருவாசகமென்றால் மணிவாசகப் பெருமான் பாடியருளிய திருவாசகத்தையே குறிக்கும். திருவாசகத்துக்குருகாதார் ஒருவாசகத்துக்குமுருகார். அரியதெல்லாம் பொன்போற் போற்றற்குரியதென்பர். ஆனல் திருவாசகம் மாணிக்கம் போன்றது. திருவாசகம் பாடிய திருவாதவூரடிகளை எம்பெருமான் மணிவாசகர் என்று அழைத்தார்; அத்திவ்விய வாசகங்களின் பெருமையையும் அருமையையும் பாராயணம்பண்ணுபவர்கள் உய்யும் திறனையும் கண்டு சர்வான்மாக்களும் தம்மாட்டு மெய்யன்பு செய்து உய்தல் வேண்டுமென்ற பெருங் கருணையுடைய முதல்வன் தம் அருமைத் திருக்கையால் அப்பாக்களை எழுதி யுலகுக்களிக்கவேண்டுமென்று திருவுளங்கொண்டார். திருவாதவூரடிகளிடம் ஓர் அந்தணராகச் சென்று எழுதினர் திருச்சிற்றம்பலமுடையார் என்ற கைச்சாத்துடன் திருத்தில்லைக் கோயிலிலுள்ள கனகசபையிலே அப்பிரபந்தத்தை வைத்தார். தில்லைவாழந்தணர்கள் கண்டார்கள். அதன் பொருளையறிய அவர்கள் விரும்பினர்கள். ஆக்கியோன் பொருள் சொல்வது சிறப்பென்று வாதவூரடிகளை யணுகினர்கள். கனகசபையிலே பொருள் கூறுவேன் என்று அவர்களை அங்கே அழைத்துச் சென்று இப்பிரபந்தம் நுதலிய பொருள் இச் சபாநாயகரேயென்று சுட்டிக்காட்டி உள்ளே சென்று சிற்சபையில் மறைந்தருளிப் பாமுத்தி பெற்றார்.

"தற்பரமாய் பரபதமாய்
 தாவிலனுபூதியதா
யற்புதமா யாரமுதா
 யானந்த நிலையவொளிப்
பொற்பினதா யறிவரிதா
 யப்பொருளாகி யருளாகுஞ்
சிற்பரமாந் திருச்சிற்றம்
 பலம்போற்றி."

என்பதினலே திருவாதவூரடிகள் அந்தர்தானமான சிற்சபையினியல்பை அறிக. எனவே திருவாசகமே வாசகம் அதற்கு வாச்சியப்பொருள் தில்லைச்சிற்றம்பலமேய சபாநாயகச் செல்வரே. ஆகையால் திருவாசகம் பாராயணம் பண்ணுபவர்கள் நாதன்தாள் சேர்வார்கள் என்பது வெளிப்படை. திருவாசகத்தைப் போற்றித் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த பாடல்களுள் பின்வரும் ஒரு பாவானது மிகவுமிங்கே சிந்திக்கற்பாலது.

"விழங்கிழை பகிர்ந்த
 மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும
 ஆரண மொழியோ
ஆதிசீர்பரவும் வாதவூரண்ணல்
 மலர்வாய்ப் பிறந்த
  வாசகத்தேனே
யாதோ சிறந்ததென்குவீராயின்
 வேதமோதி விழிநீர்பெருக்கி
நெஞ்சநெக்குருகி நிற்பவர்
 காண்கிலேம்
திருவாசகமிங் கொருகாலோதிற்
 கருங்கல்மனமுங் கரைந்துக்க
  கண்கள்
தொடுமணற் கேணியிற்
 சுரந்து நீர்பாய

சைவத்திருவாளர்
பொ. அப்புக்குட்டி அவர்கள்
வரைவது

மெய்ம்மயிர் பொடிப்ப
 விதிர்விதிர்ப்பெய்தி
அன்பராகுநர் அன்றி
 மன்பதை யுலகில் மற்றையர்
  இலரே."

தூய்மையுடைய ஒருவன் சிவனைப் பாடாமலிருக்க முடியாதென்ற ஓர் சிறந்த கருத்தையும் மணிவாசகர் "திருவெம்பாவை"ப் பதிகத்தில் "சித்தமழகியார் பாடாரோ நஞ் சிவனை" என்றருளியது சமயக் கருத்துக்களை விளக்கும் திருவாசகத்தின் மகோன்னத நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

"வெறுப்பனவே செய்யும்
 என்சிறுமையை நின்பெருமை
  யினல்
பொறுப்பவனே அராப்பூண்பவனே
 பொங்கு கங்கைச்சடை
செறுப்பவனே நின் திருவருளால்
 என்பிறவியைவே
றறுப்பவனே உடையாய்
 அடியேன் உன் அடைக்கலமே"


## சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்

1953-ம் ஆண்டு
தேர்தல் தெரிவுப் பரீட்சை

1953-ம் ஆண்டில் சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர விரும்பும் மாணவருக்கு அடுத்துவரும் கார்த்திகைமீ 1-ம் உ சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒரு தெரிவுப் பரீட்சை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்-பரீட்சைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் கல்லூரித் தலைவர் கந்தோரில் கொடுக்கப்படும்.

T. M. F. லோங்சுவாமியார்
கல்லூரித் தலைவர்.

M, 139 21, 24, 28, 31.


எனவே வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனுந் தன்மையோடு அன்பின் வழி நின்று 'காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி' இங்ஙனம் முறையிடு செய்வதைப் பார்த்துக் கருணைக் கடலாம் கடவுள் கடைக்கண்பாராதிருப்பாரா? எம்பெருமான் மணிவாசகருக்குதவி செய்து வீடருளச் செய்ததும் மற்றையவர்களுமிவ்வாசகங்களைப் படித்துக் கடைத்தேறவேண்டுமென்று மானிடச் சட்டைசாத்தித் தம் அருமைத் திருவடி நிலத்திற்றேய மணிவாசகரிடம் சென்று அவர் பாடல்களை எழுதவும் செய்தது இப்பாடல்களின் பண்பல்லவா? இவைகளைச் சிந்தித்துப்போலும் மணிவாசகர் தம் சிவபுராணத்தில் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப்பணிந்து" என்று கூறியிருக்கின்றார். சைவ மக்களாவார் இவற்றைச் சிந்தித்துத் திருவாசகப் பொருளுணர்ந்து பாராயணஞ் செய்து சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று உய்தியடைவார்களாக.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
= O =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Tuesday. October 28. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org